අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකා
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை
'Isurupaya', Battaramulla, Sri Lanka
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல / My Ref: ED1/1/3/2-I
ඔබේ අංකය / உமது இல / Your Ref:
දිනය / திகதி / Date: 2022.05.09

சுற்றறிக்கை இலக்கம் - 23 /2022

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகலகோட்டங்களுக்கும் பொறுப்பான பி.க.ப./உ.க.பாயர்கள்,
சகலபிரிவெனாதிபதிதேரர்கள்,
சகலஅரச பாடசாலைகளின் அதிபர்கள்,
அரச அங்கீகாரம் பெற்றதனியார் பாடசாலைகளின் அதிபர்கள்

## அகில இலங்கை பாடசாலை பரத நாட்டியப் போட்டி மற்றும் கதக் நடனப் போட்டி 2022

கல்வி அமைச்சின் அழகியற் கிளையினால் மேற்படிபோட்டி 2022 ஆம் வருடம் முதல் முறையாக நடாத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் உங்களுடைய மாகாணத்தில்/வலயத்தில்/கோட்டத்தில் /பாடசாலையில் உரிய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை அறிவுறுத்தி இந்த போட்டிக்கான அவர்களின் ஆக்கங்களை முன்வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேறகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### போட்டியின் குறிக்கோள்

நடன விடயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆர்வத்தை வளர்த்தல, ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பாடசாலை சமூகத்தின் ஆக்கத்திறனை அதிகரித்தல், நடனக் கலையின் பலவேறு ஆராய்ச்சிகள் மற்றும் ஆக்கங்களை வடிவமைத்தல் மூலமாக மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பது போலவே நடனக் கல்வியின் பண்புத்தர வளர்ச்சியை மேற்கொள்வதும் இந்த போட்டியின் குறிக்கோளாகும்.

- இந்த போட்டி சுற்றறிக்கை பின்வருமாறு இரண்டு பரத நடன பாரம்பரியங்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

  A பரத நாட்டியம்

  B கதக் நடனம்

- மேற்படி நடன பாரம்பரியத்தின் கீழ் போட்டிக்காக வெவ்வேறாக முன்வருவதற்கான வாய்ப்புகள் உண்டு அந்த இரண்டு நடன பாராம்பரியங்களின் கீழ் போட்டித்தலைப்புகள் வெவ்வேறாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கமைவாக உரிய சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

ගරු අමාත්‍ය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

01 பங்கேற்கும் போட்டியாளர்களை 3 முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்படும்

1. சிரேஷ்ட 1 ஆம் பகுதி - 10 மற்றும் 11 தரங்கள்
2. சிரேஷ்ட 2 ஆம் பகுதி 12 மற்றும் 13 தரங்கள்
3. திறந்த பகுதி 10 முதல் 13 வரை

02 மேற்படி பிரிவுகள் சிரேஷ்ட 1 மற்றும் 2 என வகைப்படுத்தப்படும்

1 தனி நடனம் - ஆண் - சாஸ்த்திரிய
2. தனி நடனம் - ஆண் - கிராமிய
3 குழு நடனம் - ஆண் - சாஸ்த்திரிய
4 குழு நடனம் - ஆண் - கிராமிய
5 தனி நடனம் - பெண் - சாஸ்த்திரிய
6 தனி நடனம் - பெண் - கிராமிய
7 குழு நடனம் - பெண் - சாஸ்த்திரிய
8 குழு நடனம் - பெண் - கிராமிய
9 கலப்பு நடனம் - சாஸ்த்திரிய
10 கலப்பு நடனம் - கிராமிய

03 மாணவர் எண்ணிக்கைக்கேற்ப பின்வரும் முறையில் பாடசாலைகள் வகைப்படுத்தப்படும்

1 300 க்கும் குறைவான மாணவர்களைக்கொண்ட பாடசாலைகள்

2 301-1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்

3 1001 ற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்

- மேற்படி அனைத்து பாடசாலைத் தொகுதிகளுக்குரிய போட்டித்தலைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அந்த போட்டிகளுக்காக பாடசாலை வகைகளின் கீழ் வெவ்வேறாக போட்டிக்கு சமூகமளிக்கலாம்

| இலக்கம் | பிரிவு | ஆண்/பெண் | தனி/குழு | சாஸ்த்திரிய/கிராமிய | நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | 1சிரேஷ்ட (1) | ஆண் | தனி | திஸ்ர அலாரிப்பு (சாஸ்த்திரிய) | 3-4 நிமி |
| 02 | | ஆண் | தனி | செம்பு (புன்கலஸ்)(கிராமிய | 4-6 நிமி |
| 03 | | ஆண் | குழு | பாரதி பாடல் “எட்டு திக்குகளும் பரவிய” (சாஸ்த்திரிய) | 5-7 நிமி |
| 04 | | ஆண் | குழு | காவடி நடனம் (கிராமிய) | 5-7 நிமி |
| 05 | | பெண் | தனி | ஜதீஸ்வரம் ஆரபி/சாவேரி (சாஸ்த்திரிய) | 4-5 நிமி |
| 06 | | பெண் | தனி | பூஜை நடனம் (கிராமிய) | 5-6 நிமி |
| 07 | | பெண் | குழு | ஓசை (சாஸ்த்திரிய) | 3-5 நிமி |
| 08 | | பெண் | குழு | செம்பு நடனம் (கிராமிய) | 5-6 நிமி |
| 09 | | கலப்பு | குழு | பாரதிதாசன் பாடல்கள் “சங்க நாதம்” (சாஸ்த்திரிய | 5-7 நிமி |
| 10 | | கலப்பு | குழு | உழவர் நடனம் (கிராமிய) | 5-7 நிமி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 2 கிரேஷ்ட (2) | ஆண் | தனி | தில்லான (பாடல் விருப்பத்திற்குரியது) (சாஸ்த்திரிய) | 5-6 நிமி |
| 12 | | ஆண் | தனி | புத்தாக்க நடனம் (கிராமிய) | 4-6 நிமி |
| 13 | | ஆண் | குழு | கவித்துவம் (பாடல் விருப்பத்திற்குரியது) | 4-6 நிமி |
| 14 | | ஆண் | குழு | போர் (பாரம்பரிய நடனம்) (கிராமிய) | 4-6 நிமி |
| 15 | | பெண் | தனி | பதம் (பாடல் விருப்பத்திற்குரியது) | 5-7 நிமி |
| 16 | | பெண் | தனி | புத்தாக்க நடனம் (கிராமிய) | 5-7 நிமி |
| 17 | | பெண் | குழு | வர்ணம் (பாடல் விருப்பத்திற்குரியது | 5-6 நிமி |
| 18 | | பெண் | குழு | புத்தாக்க நடகம் - பெண் விடுதலை (கிராமிய) | 8-10 நிமி |
| 19 | | கலப்பு | குழு | வர்ணம் எனும் (விரும்பிய ராக கீதம்) (சாஸ்த்திரிய) | 8-10 நிமி |
| 20 | | கலப்பு | குழு | ஓயிலாட்டம் (கிராமிய) | 6-8 நிமி |
| 21 | 3. திறந்த | | குழு | நாட்டிய நாடகம் இலக்கிய கதாபாத்திரங்கள் சமூக சீர்திருத்தச் சிந்தனையுடன் மீளுருவாக்கம் செய்தல் | 15-20 நிமி |

- இசை உதவிக்காக உச்சபட்சமாக இரண்டு பாடகர்கள் இரண்டு இசையமைப்பாளர்கள் (1 மேள வாத்தியம், 1 சங்கீத தொகுதி) நடன ஆசிரியருடன் 5 பேர் பங்கேற்கலாம். (நாட்டிய நாடகத்திற்குத் தேவையான இசைக்கருவிகள் தொடர்பான எல்லைகள் கிடையாது)

குழு நடனப் போட்டிகளுக்காக மாணவர்கள் பங்குகொள்ளும் போது குறைந்தது 4 பேர் மற்றும் கூடியது 8 பேர் பங்கேற்க வேண்டும்.

கலப்பு பிரிவுகளுக்கான மாணவர் தெரிவின் போது பெண் அல்லது ஆண் ஆகிய இரு பாலரில் குறைந்தது இருவராவது பங்குபற்ற வேண்டும். (பொதுவாக அனைத்து பாடசாலைகளும்)

திறந்த பகுதியில் நாட்டிய நாடகங்கள் தொடர்பாக ஆற்றுகைக்கான உயர்ந்தபட்ச மாணவர் எண்ணிக்கை (பொதுவாக அனைத்து பாடசாலைகளும்) 12 ஆக இருத்தல் வேண்டும்.

- <u>B– கதக் நடனப் போட்டிகளுக்கான பொது சட்டதிட்டங்கள்</u>

வட இந்திய சாஸ்த்திரிய கதக் நடனத்தின் கீழ் நடைபெறும் போட்டிகள் இம்முறை 02 முக்கிய பிரிவுகளின் கீழ் நடத்தப்படும்

1. முதல் தொகுதி 10-11 வருட மாணவர்களுக்காக
2. இரண்டாம் தொகுதி 12-13 வருட மாணவர்களுக்காக

பாடசாலகளில் மாணவர் இயலளவை கருத்திற்கொண்டு மீண்டும் அந்த தொகுதிகள் 03 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது

1. 300 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலகள்
2. 301-1000 இடையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்
3. 1001 க்கும் மேலானமாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்

இந்த வகைப்படுத்தலுக்கு உள்ளான அனைத்து பாடசாலைகள் தொடர்பாகவும்

1. ஒற்றை 2. இரட்டை 3. குழு
என மூன்றுவகையான தலைப்புகளின் அடிப்படையில் போட்டிகள் நடாத்தப்படும்

- ஆடைஅணிகள் பாரம்பரிய கதக் நடனத்திற்கமைவாக வடிவமைக்கப்படல் வேண்டும். நடனத்தில் ஈடுபடும் அங்கத்திற்குரிய கலாசாரத்திற்கு (இந்து, முஸ்லிம் பாரம்பரியங்கள்) அமைய தயாரிக்கப்படல் வேண்டும்.
- பாடல் - ஹிந்தி அல்லது வ்ரஜ் அல்லது உருது போன்ற மொழிகளில் இயற்றப்பட்ட பாடலாக இருக்க வேண்டும். மாணவர் அல்லது மாணவியால் பாடல் பாடப்படல் வேண்டும்.
- வாத்தியக் கருவிகள் - தப்லா, பகாவஜ், ஹார்மோனியம், வயலின், சித்தார், தில்ருபா, எஸ்ராஜ்,சரோத்,கிட்டார் மற்றும் புல்லாங்குழல் பயன்படுத்தலாம்
- பக்கவாத்தியத்திற்காக பங்கேற்பவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 05 ஆகும்.
- படந்த் வார்த்தை உச்சரிப்பு ஒரு மாணவர் அல்லது மாணவியால் மேற்கொள்ள வேண்டும்.
- மறைபயன்பாடு, சைகைகள் மற்றும் பாத அசைவு திறன், பாவம், அபிநயம் பாடல், வாசித்தல், மற்றும் நடனத்தின் இணைப்பின் சுவையான விளக்கக்காட்சி ஆகியவை குறிப்பாக மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படும்
- பின்னணி வடிவமைப்புகள் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படமாட்டாது

1.1.1 ஒற்றை (பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்
1.1.2 இரட்டை(பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்
(300 க்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

1.2.1 ஒற்றை (பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்

1.2.2 இரட்டை (பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்
(301-1000 வரையான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

1.3.1 ஒற்றை (பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்
1.3.2 இரட்டை(பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்
(1001க்கு மேல்மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

1.1.3 ஒற்றை (பஜன்)சாஸ்த்திரிய கதக் நடனம்
1.1.4 இரட்டை (பஜன்)சாஸ்த்திரிய கதக் நடனம்
(300 க்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

1.2.3 ஒற்றை (பஜன்)சாஸ்த்திரிய கதக் நடனம்
1.2.4 இரட்டை (பஜன்)சாஸ்த்திரிய கதக் நடனம்
(301-1000 வரையான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

1.3.3 ஒற்றை (பஜன்)சாஸ்த்திரிய கதக் நடனம்
1.3.4 இரட்டை (பஜன்)சாஸ்த்திரிய கதக் நடனம்
(1001க்கு மேல்மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

1.1.3,1.1.4,1.2.3,1.2.4,1.3.3, மற்றும் 1.3.4 ஆகிய தலைப்புகளுக்குரிய பொது நிபந்தனைகள்

- பங்கேற்க கூடிய எண்ணிக்கை போட்டியாளர்/போட்டியாளர்கள் தவிர துணை வாத்தியக் கலைஞர்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கை 05 ஆகும். ஆகக்கூடிய எண்ணிக்கை 07 ஆகும்
- நேரம்பாடலின் இயல்பான நேரமாகும்
- பாடலில் ஆமத், திஹாய், டுகடா, முகடா, பரன் மற்றும் லடி போன்ற சாஸ்த்திரிய அங்கங்கள் மறைமுக ஆக்கபூர்வமான பயன்பாடு மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படும்

2.1.1 ஒற்றை (பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்
2.1.2 இரட்டை (பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்
(300 க்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

2.2.1 ஒற்றை (பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்
2.2.2 இரட்டை (பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக நடனம்
(301-1000 வரையான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

2.3.1 ஒற்றை (பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்
2.3.2 இரட்டை (பாரம்பரிய) சாஸ்த்திரிய கதக் நடனம்
(1001 க்கு மேல்மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

2.1.1,2.1.2,2.2.1,2.2.2,2.3.1, மற்றும் 2.3.2 ஆகிய தலைப்புகளுக்குரிய பொது நிபந்தனைகள்

- பங்கேற்க கூடிய எண்ணிக்கை போட்டியாளர்/போட்டியாளர்கள் தவிர துணை வாத்தியக் கலைஞர்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கை 05 ஆகும். ஆகக்கூடிய எண்ணிக்கை 07 ஆகும்
- கால அளவு குறைந்தபட்சம் 10 நிமிடங்கள் தழகபட்சம் 12 நிமிடங்கள்
- வடிவமைப்பில் இருக்க வேண்டிய கூறுகள் - அறைகள்,
உபஜ்,டாட்,உதான்"ஆமத்,பரன்ஜுடி,ஆமந்" சலாம்"சாதா,துக்கடா" (நட்வரி ப்ரமேலு)நிக்காஸ், பாவ, தத், சாதாபரன் (பல்வேறு) லடி, திஹாய் (பல்வேறு) மற்றும் முக்கடா
- மறைபயன்பாடு, சைகைகள் மற்றும் பாத அசைவு திறன், பாவம், அபிநயம் மற்றும் விளக்கக்காட்சி ஆகியவை விசேட மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படும்
- நடனத்தில் ஈடுபடும் ஒரு சாஸ்த்திரிய அங்கம் அல்லது போட்டியாளரினால் படந்த் செய்வது கட்டாயமாகும்

2.1.3 ஒற்றை (டும்ரி, தாதரா) சாஸ்த்திரிய கதக் நடனம்
2.1.4 இரட்டை(டும்ரி, தாதரா) சாஸ்த்திரிய கதக் நடனம்)
(300 க்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக

2.2.3 ஒற்றை (டும்ரி, தாதரா) சாஸ்த்திரிய கதக் நடனம்
2.2.4 இரட்டை(டும்ரி, தாதரா) சாஸ்த்திரிய கதக் நடனம்)
(301-1000 வரையான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

2.3.3 ஒற்றை (டும்ரி, தாதரா) சாஸ்த்திரிய கதக் நடனம்
2.3.4 இரட்டை(டும்ரி, தாதரா) சாஸ்த்திரிய கதக் நடனம்)
(1001க்கு மேல்மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளுக்காக)

2.1.3,2.1.4,2.2.3,2.2.4,2.3.3, மற்றும் 2.3.4 ஆகிய தலைப்புகளுக்குரிய பொது நிபந்தனைகள்

- பங்கேற்க கூடிய எண்ணிக்கை போட்டியாளர்/போட்டியாளர்கள் தவிர துணை வாத்தியக் கலைஞர்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கை 05 ஆகும். ஆகக்கூடிய எண்ணிக்கை 07 ஆகும்
- நேரம்பாடலின் இயல்பான நேரமாகும்
- பாடலில் ஆமத், திஹாய், டுகடா, முகடா, பரன் மற்றும் லடி போன்ற சாஸ்த்திரிய அங்கங்கள் மறைமுக ஆக்கபூர்வமான பயன்பாடு மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படும்

திறந்த தொகுதி (குழு) – அனைத்து பாடசாலை மாணவர்களும் பொதுவாக பங்கேற்கலாம்

3.1 குழு (கஸல்/ஹோலி) சாஸ்த்திரிய கதக் நடனம்
3.2 குழு (தரானா) சாஸ்த்திரிய கதக் நடனம்

3.1 மற்றும் 3.2. ஆகிய தலைப்புகளுக்குரிய போட்டி நிபந்தனைகள்

- பங்கேற்க கூடிய எண்ணிக்கை போட்டியாளர்/போட்டியாளர்கள் ஆகக்குறைந்த எண்ணிக்கை 05 ஆகும். ஆகக்கூடிய எண்ணிக்கை 10 ஆகும் என்பதுடன் துணை வாத்தியக் கலைஞர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 05 மற்றும் கூடிய எண்ணிக்கை 08 ஆகும்
- நேரம்பாடலின் இயல்பான நேரமாகும்
- பாடலில் ஆமத், திஹாய், டுகடா, முகடா, பரன் மற்றும் லடி போன்ற சாஸ்த்திரிய அங்கங்கள் மறைமுக ஆக்கபூர்வமான பயன்பாடு மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படும்

1.06 எப்போதும் போட்டித் தலைப்புகளுக்குரிய நிபந்தனைகள் உரிய தலைப்புகளுக்கு பின்னர் வரிசைப்படுத்தப்பட்டிருப்பதால், ஏதேனும் ஒரு நிபந்தனை அதற்கு மேலே காட்டப்பட்டுள்ள போட்டித் தலைப்பிற்கோ அல்லது தலைப்புகளுக்கோ உரித்தாகும்.

## 02.பங்கேற்பு

<u>பரத நாட்டியம் மற்றும் கதக் நடன போட்டி இரண்டுக்குமான பொது அறிவுரைகள்</u>

### 1.பங்கேற்பு

1.1 அரச பாடசாலைகளில் மற்றும் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் மாணவர்கள் இந்த போட்டியில் பங்கேற்கலாம்

1.2 கல்வி அமைச்சின் செயலாளர்/மாகாணக் கல்விச்செயலாளர்கள்/மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்/வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அங்கீகாரத்துடன், போட்டிக்கு முன்வரும் எந்தவொரு பாடசாலைக்கும் அந்த பாடசாலை அமைந்துள்ள மாகாணத்தின் வேறு ஒரு பாடசாலையின் ஆசிரியர்கள் அல்லது மாணவர்கள் துணை வாத்தியத்திற்காக பங்கேற்புசெய்யலாம். அழகியற் ஆசிரியர் ஒருவர் இல்லாத பாடசலைகளும் மேற்படி நடைமுறையை பின்பற்றலாம்.

1.3 துணைவாத்தியத்தில் ஆசிரியர்கள் பங்கேற்பதாயின், அதிகபட்சம் இருவரை கொண்டிருத்தல் வேண்டும்.

1.4 தனியார் பாடசாலை, அரச பாடசாலை ஒன்றின் ஆசிரியர் அல்லது மாணவர் ஒருவரை துணைவாத்தியத்தில் இணைத்துக்கொண்டாலும், அரச பாடசாலையில் தனியார் பாடசாலை ஆசிரியர் ஒருவரையோ அல்லது மாணவர் ஒருவரை பங்கேற்பு செய்ய முடியாது. அத்துடன், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆசிரிய உதவியாளர்களும் துணைவாத்தியத்திற்காக பங்கேற்பு செய்யலாம்

1.5 இந்த போட்டிக்காக தரம் 10 முதல் 13 ஆம் தரங்கள் வரையிலான மாணவர்கள் பங்கேற்கலாம் என்பதுடன், அந்த பாடசாலை மூலமாக இரண்டாம் தடவையில் உயர் தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பங்கேற்கலாம்

1.6 ஒரு பாடசாலை 03 போட்டித்தலைப்புகளில் மாத்திரம் பங்கேற்கலாம் (மேற்கண்டவாறு மாணவர் எண்ணிக்கையென வகைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் தொடர்பிலான போட்டிகள் வெவ்வேறாக நடத்தப்படும்)

1.7. இந்த போட்டிக்காக இயற்றப்படும் பாடல் வரிகள் போன்றவை இன மத போதங்களுக்கோ அல்லது அரசியல் சார்ந்த கருத்துக்களுக்கோ வித்திடாதவையாகவும் போட்டியில் முன்வைப்பதற்கு தலைமை நடுவர் குழுக்களுக்கு வழங்குவதற்காக போட்டியின் பிரதானஅமைப்பாளருக்கு ஒப்படைக்க வேண்டும்

1.8 வலய மற்றும் மாகாண போட்டி சந்தர்ப்பங்களில், நடனப் போட்டிகளுக்காக பிரயோக பயிற்சி உடையுடன் கலந்துகொள்ளல் வேண்டும் (நாட்டிய நாடகத்திற்கு மாத்திரம் இது உரித்தாகாது) தேசிய மட்டப் போட்டிகளின்போது (நடனத்திற்காக) உரிய உடை ஒப்பனை அலங்காரங்களுடன் பங்குபற்றலாம்

1.9 இறுதிப் போட்டிக்கான நேரசூசியில் ஒதுக்கப்பட்ட கால எல்லைக்குள் பங்குபற்றாத பாடசாலைகள் அந்த போட்டி தலைப்புகளில் பங்குபற்றவில்லை எனக்கருதி முடிவுகள் வழங்கப்படும்

## 02.போட்டிச் சந்தரப்பங்கள்

2.1 இப்போட்டிகள் வலய மட்டம், மாகாண மற்றும் தேசிய மட்டம் ஆகிய முறையில் நடத்தப்படும்.

2.2 வலயப் போட்டிகள் உரிய கல்விப் பணிப்பாளரினால் அழகியல் நடன பாடப் பொறுப்பு உத்தியோகத்தரினது உதவியுடன் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

2.3 வலயப் போட்டிகளின் சகல பொறுப்புக்களும் வலயக்கல்விப் பொறுப்பாளருக்கு வழங்கப்படுவதோடு இவ்வாலோசனை வழிகாட்டிக்கு அமைவாக அவர் போட்டி முடிவுகளின் இறுதித் தீர்ப்பாளர் ஆவார்

2.4 வலயப் போட்டிகளை ஜூன் மாத இறுதிக்குள் நடத்தி முடிவுகளை மாகாண போட்டி ஒழுங்கமைப்பிற்காக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

2.5 வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெறும் போட்டியாளர்களே மாகாண மட்டப் போட்டிக்கு தகுதியுடையவர்களாவர்

2.6 மாகாண மட்டப் போட்டி உரிய மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும். இதன்போது மாகாணக் கல்விப் பணிப்பாளரின் இணக்கப்பாட்டுடன் அந்த மாகாணத்தின் அழகியல் பாட உத்தியோகத்தர் ஒருவர் கல்வி அமைச்சின் அழகிய பணிப்பாளரினால் பெயர் குறிப்பிடப்படுவர்

2.7 மாகாணத்தின் சகலபொறுப்புக்களும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்படுவதுடன் அவரே சுற்றுநிருபத்திற்கு மாற்றமில்லாதவாறு போட்டி முடிவுகளின் இறுதித் தீர்மானிப்பாளராவார். இந்த போட்டி செப்டம்பர் மாத இறுதிக்குள் நடத்தப்பட்டு முடிவுப் பட்டியலை தேசிய மட்டப்போட்டிக்காக கல்வி அமைச்சின் அழகிய பணிப்பாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

2.8 மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறும் போட்டியாளரே தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றுவதற்கான தகுதியுடையவராவார்

2.9 தேசிய மட்ட போட்டிகள் நவம்பர் மாத இறுதிக்குள் நடத்தப்படும்

2.10 அந்தந்த போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்கள் அதே போட்டித் தலைப்புகளிலேயே தேசிய மட்டம் வரை பங்குபற்றுதல் கட்டாயமானது.

2.11 வலய மட்டத்தில் தோற்றி வெற்றி பெற்ற மாணவர்களே மாகாண மட்டத்திற்கும், மாகாண மட்டத்தில் தோற்றி வெற்றி பெற்ற மாணவர்கள் தேசிய மட்டத்தில் கலந்துகொள்வது கட்டாயமாகும். இது தொடர்பில் தவிர்க்க முடியாத பிரச்சனைகள் எழும் பட்சத்தில் பாடசாலை அதிபரின் பரிந்துரையின் அடிப்படையில் வலய போட்டி மட்டத்தில் வலயக் கல்வி பணிப்பாளரினதும், மாகாண மட்டத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளரினதும், அகில இலங்கை போட்டி மட்டத்தின் போது கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் (அழகியல்) அவர்களின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் அந்த பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும்.

2.12 தனி அல்லது குழுத்தலைப்பொன்றுக்கு பங்குபற்றும் போட்டியாளர் சார்ந்த பாடசாலை ஒன்று, வலய அல்லது மாகாண மட்டத்தில் பங்குபற்றி வெற்றி பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் அப்போட்டியாளருக்கு அடுத்த கட்ட போட்டி நடைபெறுவதற்கு முன் தாம் பங்குபற்றிய பாடசாலையில் இருந்து விலகி வேறு பாடசாலைக்குச் சேர வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது வலய மட்ட போட்டியில் பங்குபற்றிய பாடசாலை சார்பாகப் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். அப்போட்டியாளர் தான் புதிதாக சேர்ந்த பாடசாலையின் சார்பாக போட்டியிட முடிவது அடுத்த வருடத்திற்கான போட்டியிலிருந்தாகும்

2.13 வலய மட்ட போட்டிகளில் பங்குபற்றாத எந்த பாடசாலைகளும் அடுத்த மட்ட போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

2.14 அந்தந்த பாடசாலை அதிபரின் அனுமதியுடன் மாத்திரமே போட்டி நிகழ்வுகளில் பங்குகொள்ள முடியும். பக்கவாத்தியத்திற்காக வேறு பாடசாலை ஒன்றின் மாணவர் ஒருவரையோ அல்லது ஆசிரியர் ஒருவரையோ சேர்த்துக்கொள்ளும் போது உரிய பாடசாலை அதிபரின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

2.15 மாகாண போட்டி முடிவுகள் மிகத்தெளிவாகவும் நுல்லியமாகவும் தயாரிக்கப்பட்டு தலைப்பு ஒழுங்கில்முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை மட்டும் குறிப்பிட்டு பாடசாலை முகவரியையும் சரியாக குறிப்பிடப்பட்டு இறுதிப்போட்டிக்காக கல்வி அமைச்சிற்கு அனுப்ப வேண்டும்

2.16 போட்டிகளின் போது சமநிலை முடிவுகள் வழங்குவதை தவிர்க்க வேண்டும்.

2.17 மாகாண மட்டத்தில் முதலிடம் பெறும் வெற்றியாளர்களை மாத்திரம் தேசிய மட்ட போட்டிகளுக்கு முன்னிலைப்படுத்த வேண்டும். இதன் முழுப்பொறுப்பும் மாகாணக் கல்விப்பணிப்பாளரை சார்ந்ததாகும். எக்காரணங்களைக் கொண்டும் ஒரு போட்டித்தலைப்பில் ஒரு மாகாணத்தில் இருந்து இரண்டு பாடசாலைகள் அல்லது அதற்கு மேற்பட்டவையோ பங்குபற்ற முடியாது. தேசிய போட்டிக்கு மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற பாடசாலைக்கு மாத்திரம் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கும்.

## 03. நடுவர்கள் தெரிவு

வலயப் போட்டிகளுக்காக நடுவர் குழு உரிய வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரினாலும் மாகாண போட்டிகளுக்கான நடுவர் முடிவுகள் உரிய மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளரினாலும் தமது வலய/மாகாணஅழகியல் அல்லது சங்கீத பாடத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் நியமிக்க வேண்டும்.. இறுதிப் போட்டியின் நடுவர் குழாமை தீர்மானிப்பது, கல்வி அமைச்சின்சங்கீத பாடத்திற்குப் பொறுப்பான பணிப்பாளரின் ஆலோசனையுடன் மற்றும் அழகியல் பணிப்பாளரின் அனுமதியின் அடிப்படையில் ஆகும். அத்துடன் ஒரு போட்டித் தலைப்பில் விடயம் சார்ந்த பிரச்சினைகள் தோன்றும் பட்சத்தில் அது குறித்து முடிவொன்றை எடுக்கவேண்டும் என தோன்றும்போது மாத்திரம், கல்விச் செயலாளரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் நடுவர் குழுவுடன் கலந்துரையாடி முடிவெடுக்க நேரிடும்.

- மேற்படி இரண்டு போட்டிகளுக்கும் உரியவாறு வலயப் போட்டிக்கு மாணவர்களை பங்குபெறச் செய்வது அந்தந்த வலயங்களின் விடய பணிப்பாளரின் மற்றும் அதிபரின் பொறுப்பாகும் போட்டிக்காக விண்ணப்பிப்பவர்கள் இந்த சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது தட்டச்சு செய்ய முடியாவிட்டால் தெளிவான கெப்பிட்டல் ஆங்கில எழுத்துக்களில் பூர்த்திசெய்ய வேண்டும். ஆவ்வாறு ஏனைய பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பக்க வாத்தியத்தில் பங்கேற்பதாக இருப்பின் மேற்கண்ட படிவத்தை பயன்படுத்த வேண்டும்

இந்தப் போட்டிக்காக முன்வரும் அனைத்து போட்டியாளர்களும் போட்டியின் சகலசந்தர்ப்பங்களின் போது இந்த போட்டிச்சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களை பின்பற்றுவதற்கும், நடுவர்களின் முடிவு இறுதி முடிவாக ஏற்றுக்கொள்வதற்கும் இணக்கம் தெரிவிக்க வேண்டும். அகில இலங்கை மட்டத்தில் இறுதி போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்ற போட்டி நேரசூசி கோவையுடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நன்கு வாசித்து புரிந்து கொண்டு அதிபரினால் குறிப்பிட்ட இடத்தில் ஒப்பமிட்டு போட்டியில் பங்குபெற வேண்டும். இந்த சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள வாசகங்கள் மற்றும் எல்லைகள் ஒன்றுக்கு அல்லது அனைத்திற்கும் மாறாக செயற்பட்டிருப்பது தெரியவரும் பட்சத்தில் போட்டியின் எந்த சந்தர்ப்பத்திலும் இறுதி அட்டவணையில் இருந்து அந்த பாடசாலையை அகற்றுதல், ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் உட்பட ஏனைய முடிவுகளை எடுக்கும் உரிமை அமைச்சை சார்ந்ததாகும்

பேராசிரியர் கபில சீ. கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

இணைப்பு 01

## மாதிரி விண்ணப்பப் படிவம்

(இம் மாதிரிக்கேற்ப விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தயாரிக்கும்பொழுது தட்டச்சு அல்லது கணினியைப் பயன்படுத்துவது சிறப்பானது)

# அகில இலங்கை பாடசாலை பரத நாட்டியப் போட்டி மற்றும் கதக் நடனப் போட்டி 2022

(உரிய கூட்டினுள் √ அடையாளம் இ

பாடசாலை மாணவர் தொகை

| 300 இற்குக் குறைந்த | 301 – 1000 இற்கும் இடைப்பட்ட | 1001 இற்கு மேற்பட்ட |
|---|---|---|
| | | |

01. பாடசாலையின் பெயரும் முகவரியும் :-

02. தொலைபேசி இலக்கம் (பாடசாலை ................. அதிபர் .............. ஆசிரியர் ................)

03. பாடசாலை அமைந்துள்ள மாகாணம் :

04. பாடசாலை அமைந்துள்ள கல்வி வலயம் :

05. தோற்றுகின்ற போட்டியின் பெயர் : (சுற்றறிக்கைக்கேற்ப குறிப்பிடுக)

| | போட்டித் தலைப்புகள் | நிகழ்ச்சி இலக்கம் | தனி / குழு |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |

06. போட்டியில் பங்குபற்றும் மாணவ மாணவியரின் பெயர்ப்பட்டியல் ( ENGLISH CAPITAL) ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் எழுதுக)

| | மாணவ / மாணவியின் பெயர் | பெண் / ஆண் | கல்வி கற்கும் தரம் | பிறந்த திகதி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |

(குழுப் போட்டிகளின் போது தேவையான விதத்தில் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்)

07. போட்டிக்கான உதவி

7.1. வாத்தியம்

| | மாணவ / மாணவியின் பெயர் | பெண் / ஆண் | பாடசாலை | கல்வி கற்கும் தரம் | பிறந்த திகதி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |

(குழுப் போட்டிகளின் போது தேவையான விதத்தில் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்)

7.2. உதவி வாத்தியம்

(வாத்தியத்துக்காக ஆசிரிய ஆசிரியைகள் பங்குபற்றுவார்களாயின் அவர்களின் பெயருக்கு எதிரில் திரு/திருமதி/செல்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும்)

| | ஆசிரியரின் பெயர் | பெண் / ஆண் | பாடசாலை | பிறந்த திகதி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |

(குழுப் போட்டிகளின் போது தேவையான விதத்தில் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்)

08. போட்டி நிகழ்ச்சியைப் பயிற்றுவித்த ஆசிரிய ஆசிரியைகள்

| ஆசிரியரின் பெயர் | பாடசாலை | தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் | கையொப்பம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

09. மாணவ / மாணவிகளுக்குப் பொறுப்பாக வருகைதரும் ஆசிரியர்களின் விபரம்

| ஆசிரியரின் பெயர் | கற்பிக்கும் பாடம் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் | கையொப்பம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

மாணவிகளின் நிகழ்ச்சியாயின் ஆசிரியையொருவரும் மாணவர்களின் நிகழ்ச்சியாயின் ஆசிரியரொருவரும் கலப்பு நிகழ்ச்சியாயின் ஆசிரிய ஆசிரியைகளும் பொறுப்பாளராகப் பங்குபற்றுதல் வேண்டும்.

## இணைப்பு 02

### புகைப்படம் உறுதிப்படுத்தல்

(அதிபரினால் பூரணப்படுத்துவதற்காக)

**அகில இலங்கை பாடசாலை பரத நாட்டியப் போட்டி மற்றும் கதக் நடனப் போட்டி 2022**

பாடசாலையின் பெயரும் முகவரியும் :-

1. மாணவ / மாணவியின் பெயர் :-
2. கல்வி கற்கும் தரம் :-
3. பிறந்த திகதி :-
4. போட்டி நடைபெறும் வருடத்தின் ஜனவரி 01ஆம் திகதிக்கு வயது :-

மேற்குறிப்பிட்ட மாணவன் / மாணவி எமது பாடசாலையில் குறிப்பிட்ட தரத்தில் கல்வி பயில்கிறார் எனவும் அவர் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :- ..........................

..........................................

அதிபரின் கையொப்பம்

பாடசாலை முத்திரை :

கல்வி வலயத்தின், கோட்டத்தின் சங்கீத பாடப்பொறுப்பு பி.க.ப/உ.க.ப/ ஆசிரிய ஆலோசகரின் சிபார்சு

அதிபரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட மாணவன் / மாணவி பற்றிய தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என சிபார்சு செய்கின்றேன்.

சங்கீத பி.க.ப / உ.க.ப/

ஆசிரிய ஆலோசகரது கையொப்பம்

பதவி முத்திரை மற்றும் திகதி:-

இப் போட்டியில் பங்குபற்றுகின்ற மாணவ மாணவிகள் அவர்கள் பங்குபற்றுகின்ற போட்டி நிகழ்ச்சிகளுக்குரிய தரங்களில் கல்விகற்கின்றார்கள் எனவும் சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ள சகல போட்டி நிபந்தனைகளின் படி போட்டிக்கு அனுப்பப்படுகின்றார்கள் எனவும் போட்டிகளின் போது மாணவர்களுக்குரிய பொறுப்பாளர்களாக பெற்றோரையோ அல்லது வேறு நபர்களையோ அனுமதிப்பதில்லை எனவும் நடுவர்களால் வழங்கப்படும் தீர்ப்பினை இறுதித் தீர்ப்பாகக் கொள்வதாகவும் சகல சந்தர்ப்பங்களிலும் எனது பாடசாலையின் மாணவ மாணவியர் ஒழுக்கமாக நடந்து கொள்ளும் பொறுப்பினை தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்கிறேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

ஆசிரியரின் கையொப்பம்

அதிபரின் கையொப்பம்

ஆசிரியரின் பெயர்

அதிபரின் பெயரும் பாடசாலை முத்திரையும்

திகதி

திகதி

அதிபர் போட்டியில் போட்டியிடும் சகல மாணவ மாணவிகளும் போட்டி நிகழ்ச்சிகளுக்குரிய தரங்களில் கல்வி கற்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொறுப்பினைப் பரிசீலித்து ஏற்பதே அதிபரது பொறுப்பாகும்.